Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/46/2023**

# ஆயர் சுற்று மடல்
## புனித வின்சென்ட் தே பவுல் திருநாள்

**“இரக்கமுடையோர் பேறுபெற்றோர்;**
**ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்” (மத்.5:7)**

என்ற விவிலிய கூற்றுக்கு ஏற்ப எளிமையாய் வாழ்ந்து குருவானவராய் தனது வாழ்வு முழுவதையும் ஏழைகளுக்காகவே அர்ப்பணித்து வாழந்தவர் தான் புனித வின்சென்ட் தே பவுல். ஆகவே தான் அவரை ஏழைகளின் பாதுகாவலர் என நாம் அழைக்கிறோம். அவர் நிறுவிய பிறரன்புப் பணியாளர்களின் பல இல்லங்கள்; பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் ஒளிவிளக்காக திகழ்கிறது என்பதும் வரலாற்று உண்மை.

**“இரு கை கூப்பி கடவுளை வணங்குவதைவிட**
**ஒரு கை நீட்டி உதவி செய்;**
**இரு கை உன்னை வணங்கும் கடவுளாக” – அன்னைத் தெரேசா**

ஏழை எளிய மக்களில் இறைவனைக் கண்டு பிறரன்புக்கு சான்றாக வாழ்ந்த சபை பாதுகாவலர் புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் சபை நிறுவனரான அருளாளர் பிரடெரிக் ஓசானாம் ஆகியோர்களை உலகெங்கும் பரவி கிடக்கின்ற வின்செந்திய சபை சகோதரர்களின் கரங்கள் மட்டுமல்ல; அன்னை தெரசாவின் கூற்று போல அச்சபையிலிருந்து தினம் தினம் உதவி பெறும் ஏழைகளின் கரங்களும் வணங்கும்.

### வின்செந்திய சபையின் தோற்றம்

1833-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ல் ‘தருமசபை’ என்னும் பெயரில் பிரான்ஸ் நாட்டில் 20 வயதுடைய பிரடெரிக் ஓசானாம் என்னும் சட்டக் கல்லூரி மாணவனால் கருகொண்டது தான் இச்சபை. 20 முதல் 22 வயதுடைய 6 இளைஞர்கள் மற்றும் சகோ.பெய்லி என்ற 40 வயதுடைய முதிர்ந்தவரின் வழிகாட்டுதலுடன் தோன்றிய முதல் கிளைச்சபை 1834 – ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் நாள் **“புனித வின்சென்ட் தே பவுல்”** என்ற பிறரன்பு பணியாளர்களின் பாதுகாவலர் பெயரில் மாற்றம் பெற்று இன்றளவும் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இன்று இச்சபை சுமார் 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் 47000-க்கும் மேற்பட்ட கிளைச்சபைகளுடன் செயல்படுகிறது என்பதை எண்ணி பெருமை கொள்வோம். தற்பொழுது 8 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு

பொதுநிலையினரின் தலைமையில் செயல்படும் உலகளாவிய பிறரன்புச் சபையே இச்சபை. இச்சபையில் உறுப்பினர்களாக இணைந்து செயல்படும் ஒவ்வொரு பிறரன்பு பணியாளர்களையும் இச்சபையின் பாதுகாவலர் திருநாளில் மனதாரப் பாராட்டி திருநாள் வாழ்த்துக்களைப் பதிவு செய்கிறேன்.

செப்டம்பர் 9 அருளாளர் பிரெடரிக் ஓசானாம் திருநாளையும் செப்டம்பர் 27-ல் புனித வின்சென்ட் தே பவுல் திருநாளையும் கத்தோலிக்க திருச்சபை நினைவு கூர்ந்து திருநாள் கொண்டாடுகிறது. ஆகவே ஒவ்வொரு கிளைச்சபை உறுப்பினர்களும் இந்த சிறப்பு நாளை உங்கள் செயல்பாடுகளால் சிறப்புறச் செய்ய வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1963 –ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ஆம் நாள் அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரின் சீரிய முயற்சியால் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கபிரியேல் நாடார் தலைமையில் சூசைபுரம், புனித சூசையப்பர் பங்கில் குமரி மண்ணில் அதிகார பூர்வ முதல் கிளைச்சபை உருகொண்டது. தக்கலை மறைமாவட்டம் உருவானபின் 12.12.1997-ஆம் ஆண்டு தக்கலை மத்தியப் பேரவை உருவானதையும் நீங்கள் அறிவீர்கள். மத்தியப் பேரவை உருவானதன் வெள்ளிவிழா நினைவாக 11.12.2022-ல் நோயாளிகள் மற்றும் ஏழைகள் பயன்பெறும் வகையில் விடியல் அருள் அவை நடுவம் (VAAN) என்னும் பல்நோக்கு பயன்பாட்டுக் கட்டிடம் ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரி அருகே திறக்கப்பட்டது. அது தக்கலை வின்செந்தியர்களின் அயராத உழைப்பின் பயன் மட்டுமல்ல; பிறரன்புப் பணிகளில் புதியப் பாதையில் பயணிக்க உருவாக்கப்பட்ட புதிய பாதை எனலாம். அதன் செயல்பாடு வெற்றியடைய முழு ஈடுபாட்டுடன் அனைவரும் உழைக்கவும் ஜெபிக்கவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 20—ம் தேதி மஞ்சாலுமூடு வட்டாரசபைக்குட்பட்ட முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து நடைபெற்ற மத்திய சபை 26-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வின்செந்திய உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்கள். ஆண்டு விழாவில் வழங்கப்பட்ட வெள்ளிவிழா மலரினை அனைத்து வின்செந்தியர்களும் முழுமையாகப் படித்து தக்கலை மத்திய பேரவையின் செயல்பாடுகளையும், கடந்து வந்த வரலாற்று சுவடுகளையும் அறிந்து கொள்வது நமது பணிகளை இன்னும் ஆர்வமுடன் செய்திட உதவும் என கருதுகிறேன். வெள்ளிவிழா மலரினை உரிய முறையில் அனைத்து வின்செந்தியர்களுக்கும் வழங்கிட உழைத்த குழு உறுப்பினர்களை பாராட்டுகிறேன்.

மத்திய பேரவை முன்னெடுத்து வரும் காருண்யா நிதித் திட்டம், கல்வி உதவித் திட்டம், ஜீபி கடனுதவித் திட்டம், சுயதொழில் கடனுதவி திட்டம் போன்றவை வாயிலாக நடைபெறும் அனைத்து பிறரன்பு பணிகளையும் பாராட்டுவதோடு அதன் செயல்பாடுகளை மேலும் துரிதப்படுத்தவும் நீங்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 2-ஆம் தேதி **'தேசத்தோடு ஒருநாள்'** என்ற மையச் சிந்ததனையில் நீங்கள் செய்துவரும் 'தூய்மைப் பணி இவ்வாண்டு காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி கோள்வதோடு; இயன்றவர்கள் அனைவரும் அங்கு நடக்கும் தூய்மை பணியில் கலந்து கொள்ளவும் அறிவுறுத்துகிறேன். அங்கு செல்ல இயலாதவர்கள் உங்கள் ஆலய வளாகத்தையாவது தூய்மை செய்து அந்த நாளை தூய்மைப் பணி நாளாக சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

தக்கலை மத்திய பேரவையின் ஒரு அங்கமாக சிறப்பாக செயல்பட்டுவரும் உத்திரங்கோடு ஓசனாம் கல்வி நிலையத்தில் நடைபெறும் Don Bosco Technical Education அரசு சார்பு பயிற்சிகள், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தொலைதூர கல்வித்திட்டத்தில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளும், இவை தவிர கணினி, தட்டச்சு, தையல், ஆரி வேலைப்பாடு தொடர்புடைய பல்வேறு பயிற்சிகளும் நன்முறையில் நடைப்பெற்று வருகிறது. அதனை முடிந்தவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வின்செந்தியர்களின் முக்கிய பணிகளில் ஒன்று துயரத்தில் வாடும் ஏழைகளுக்கு உதவி புரிதல் மற்றொன்று ஏழை எளிய மக்களுக்கு ஆன்மீக வாழ்வின் வழியை பகிர்ந்தளிப்பது. இதனை அனைத்து வின்செந்தியர்களும் கருத்தில் கொள்வது அவசியம். புதிய உறுப்பினர்களை கிளைச்சபையில் சேர்ப்பது குறிப்பாக இளையோர்களை வின்செந்திய பிறரன்பு பணிகளில் இணைத்து கொள்வதில் நாம் ஆர்வம் காட்டுவது காலத்தின் கட்டாயம் என்பதை உணர வேண்டும். வெளிநாட்டு உதவிகள் குறைந்துவரும் இக்காலச்சூழலில் இரகசிய நன்கொடை, உள்ளூர் நன்கொடை, துணை உறுப்பினர் நன்கொடை ஆகியவற்றில் வின்செந்திய உறுப்பினர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

வின்செந்திய செயல்பாடுகளில் ஆன்மீக ஆலோசகரின் முக்கியத்துவத்தை உணர்ந்து; கிளைச்சபையின் செயல்பாடுகளில் அருட்தந்தையர்களின் ஆன்மீக வழிநடத்துதலை ஏற்று செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாலவர்களின் விழாக்களை நமது மறைமாவட்டத்தில் கொண்டாடும் இவ்வேளையில்; இறைநம்பிக்கையில் ஒவ்வொரு வின்செந்தியர்களும் ஆழப்பட வேண்டும்; அதுபோல பிறரையும் உங்கள் பிறரன்புப் பணி வழியாக இறை நம்பிக்கையில் வளர உதவ வேண்டும். அப்போது தான்; இறைவன் விரும்பிய புதிய இறையரசை நம்மால் கட்டியெழுப்ப முடியும். இன்றைய தினம் ஆலயத்தில் எடுக்கப்படும் காணிக்கையானது வின்செந்திய பணிகளுக்கு வழங்கப்படுவது வழக்கம். அதை பங்குத் தந்தையிடமிருந்து பெற்று உள்ளூர் நன்கொடையும் பிரித்து பயனுள்ள வகையில் திட்டமிட்டு செலவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். வின்செந்தியர்கள் ஒவ்வொருவரும் கடவுளுக்கும் நீங்கள் சார்ந்துள்ள சபைக்கும் ஏழைகளுக்கும் விசுவாசமாக இருந்து வின்செந்திய பணிகளைச் செய்ய வேண்டும் என உங்களை அழைக்கிறேன். இன்றைய திருப்பலியில் பிறரன்புப் பணிபுரியும் ஒவ்வொருவரையும் ஒப்புக்கொடுத்து செபிப்போம். ஏராளமான பிறரன்புப் பணிகள் நமது மறைமாவட்டத்திற்கு தேவையாய் உள்ளது. அதை உணர்ந்து உங்கள் செயல்பாடுகள் அமைய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இறைவன் உங்களையும் உங்கள் பணிகளையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
21.09.2023

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✝மார் ஜார்ஜ் இராஜேந்திரன் **SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு:** இச்சுற்றுமடலை 24.09.2023, ஞாயிற்றுக்கிழமை அனைத்துபங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.